(5) 1972-ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றுலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72).

மாண்புமிகு திரு செ. மாதவன் : சட்ட மன்றத் தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றுலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன் முடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

நகரியங்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்படும் நகரியக் குழுக்களில் மாநில சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், லோக் சபை உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று துணைச் சட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. அரசு மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, 1940-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1940), 1954-ஆம் ஆண்டு குற்றுலம் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1954), 1954-ஆம் ஆண்டு பவானிசாகர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1954) ஆகிய சட்டங்களைத் திருத்த முடிவு செய்தது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக்கொண்டு இவ்வரைவினை இம்மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட "1972-ம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றுல நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்குக் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றுலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

@244—247ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேறப்பட்டது.

Mr. CHAIRMAN : I have to announce to the House that the House will meet at 10 a.m. tomorrow. There will be no Question Hour and the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1972 will be taken up.

6-30 p. m. The House will now adjourn and meet again tomorrow at 10 a.m.

The House then adjourned.

8. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

37. Notification issued with G.O. Ms. No. 2782, Revenue, dated the 24th October, 1972, in regard to exemption from payment of sales tax by any dealer on the sales of goods to the Assistant High Commissioner for Malaysia at Madras for his official use. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

38. Notification issued with G.O. Ms. No. 2729, Revenue, dated the 19th October, 1972, in regard to date of commencement of the Tamil Nadu Betting Tax (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 9 of 1972). [*Laid on the table of the House under section* 10 (4) *of the Tamil Nadu Betting Tax Act*, 1935 (*Tamil Nadu Act XX of* 1935).]

39. Notification issued with G.O. Ms. No. 2730, Revenue, dated the 19th October, 1972, in regard to date of commencement of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 3 of 1972). [*Laid on the table of the House under section* 29 (2) *of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act*, 1939 (*Tamil Nadu Act 6 of* 1939).]